

a don
RICCERI

புனித லூர்து அன்னை ஆலயம். பெரம்பூர்.
28.2.1968

சங்கைக்குரிய ரிச்சீரி தந்தையவர்களே!

இன்று தாங்கள் எங்கள் மத்தியில் காண்பது பெரு மதிப்பிற்கும், மகிழ்ச்சிக்கும் உரியதாகும். சலேசியத் தலைவரும், ஜான் போஸ்கோ தோற்றத்தின் 6-வது தலைவருமான தாங்கள் நெடுந்தொலைவு வந்து எங்களை ஆசீர்வதித்து, ஆதரவளிக்க வந்த வரவு எம்மேல் வைத்த நேசத்தையும், அன்பையும் எடுத்துக்காட்டுகிறது.

ஒப்புயர்வற்ற இந்நன்னாளில் கடவுள் ஆசிபெற்ற ஞானக் குழந்தைகளாகிய நாங்கள் சொல்லுதற்குரிய மகிழ்ச்சியுடன் தங்களை வரவேற்கின்றோம். எவ்வளவோ அலுவல்களுக்கிடையில், பொன்னினும் அரிய தங்கள் நேரத்தில் சிறிதளவு எங்களுக்காக செலவிட தயை கூர்ந்த இம் மாபெரும் நிகழ்ச்சியை என்றும் யாம் மறவோம்.

இத்தேவாலயம் புனித லூர்தன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டு, வருடாந்திர தேசிய யாத்திரைத் தலமென்பது தங்களுக்குத் தெரிந்திருக்குமென நினைக்கிறோம். ௨௧-வது தேசிய யாத்திரையின் போது இக் கெபியை முடிக்க ஆவல் கொண்டிருந்தோம். ஆனால் எங்கள் கனவு நனவாகவில்லை. தெய்வ செயல் வேறு திட்டம் கொண்டிருந்தது. ஏமாற்றத்தில் அன்று கண்ணிழந்த நாங்கள் இன்று, வேதாகம வாக்கின்படி "இப்போது காண்கிறோம்." கடவுளின் கரம் தங்களை இந்த இடத்திற்கு உந்தி தள்ளி இந்த இடத்தை அர்ச்சித்து கெபிக்கு அடிக்கல் நாட்டி, தொன் போஸ்கோவின் தாய் கிறிஸ்துவ சகாயின் மேல் சலேசியர் கொண்டுள்ள அன்பையும், வணக்கத்தையும் நடைபெறும் ஆண்டுகளில் காட்டும்படி செய்தது.

அன்பு தந்தையே!

எங்கள் ஆரட்டரியையும் இங்கு காண்பீர்கள். நம் தந்தையின் ஆசிப்படி இளமையின் அழகையும், வாலிபத்தின் மகிழ்ச்சியையும் உயர்ப்பிக்க முயல்கின்றோம். எங்களிடம் இளைஞர்களின் மன்றம் உண்டு என்பதை நினைவிலிருத்திச் செல்லுவீர். கல்லாலும், மண்ணாலுமான கட்டடமட்டுமல்ல, விளையாட்டு மைதானமல்ல, ஆனால்